பிஏபி வாய்க்காலின் தடுப்பு சுவரை உயர்த்தி கட்ட கோரிக்கை

▶ வாளவாடி- சின்னப்புதூர் இடையே தடுப்பு சுவர் உயரம் குறைவாக உள்ள கால்வாய் பாலம்.

உடுமலை, ஜூன் 10: திருமூர்த்தி அணையில் துவங்கும் பிஏபி பிரதான கால்வாய், உடுமலை, வாளவாடி, சின்னப்புதூர், விளாமரத்துபட்டி வழியாக செல்கிறது.

இதில், வாளவாடிக்கும், சின்னப்புதூருக்கும் இடையில் கால்வாயின் குறுக்கே குறுகிய பாலம் ஒன்று உள்ளது. இந்த வழியாக தோட்ட சாலைகளுக்கு விவசாய பொருட்களை ஏற்றி டிராக்டர் உள்ளிட்ட வாகனங்கள் அதிகளவில் செல்கின்றன.மேலும், தளி, திருமூர்த்திமலை செல்ல குறுக்கு வழி என்பதால் உள்ளூர் மக்களும், சுற்றுலா வாகனங்களும் இந்த வழித்தடத்தை பயன்படுத்துகின்றன. வாகனங்கள் அதிகளவில் செல்கின்றன.இங்கு அமைந்துள்ள கால்வாய் பாலத்தின் தடுப்பு சுவர் உயரம் குறைவாக உள்ளது. இதனால் இரு சக்கர வாகனத்தில் செல்வோர் சற்று தடுமாறினாலும் கால்வாய்க்குள் விழும் ஆபத்து உள்ளது.எனவே, கால்வாய் பாலத்தின் தடுப்புச் சுவரை உயர்த்தி கட்ட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முகூர்த்த தினம், வைகாசி விசாகத்தை முன்னிட்டு

தென்மாவட்டங்களுக்கு கூடுதலாக 70 பஸ்கள்

திருப்பூர், ஜூன் 10: தொழிலாளர்கள் நிறைந்த திருப்பூரில் விடுமுறை நாட்களில் பஸ் நிலையங்களில் கூட்டம் அதிகமாக இருக்கும். முகூர்த்த தினம் மற்றும் வைகாசி விசாகம் என்பதால் வெளி மாவட்ட தொழிலாளர்கள் சொந்த ஊருக்கு புறப்பட்டனர். கடந்த 2 நாட்களாக இரவு பஸ்களில் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. குறிப்பாக தென்மாவட்டங்களான தேனி, கம்பம், மதுரை, திருநெல்வேலி, கன்னியாக்குமரி, நாகர்கோயில், தூத்துக்குடி, திருச்செந்தூர் செல்லும் பஸ்களில் பயணிகள் முண்டியடித்து சென்றனர்.

முன்னேற்பாடாக அரசு போக்குவரத்து கழகத்தின் சார்பில் 70 கூடுதல் பஸ்கள் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இருப்பினும் கோவில்வழி பஸ் நிலையத்தில் பயணிகள் கூட்டம் அலைமோதியது.

போக்குவரத்து கழக அதிகாரிகள் மதுரை, தேனி, திண்டுக்கல், திருநெல்வேலி, நாகர்கோவில், கம்பம் மார்க்கமாக பயணிகளின் வருகைக்கு ஏற்ப பஸ்களை இயக்கினார்கள். இதுபோல் மத்திய பஸ் நிலையம், புதிய பஸ் நிலையம் ஆகியவற்றிலும் கூட்டம் காணப்பட்டது.

கூட்டு குடிநீர் திட்ட பிரதான குழாய் உடைப்பு

உடுமலை, ஜூன் 10: உடுமலை அருகே உள்ள தும்பலப் பட்டி வழியாக பழனி, ஆனைமலை உள்ளிட்ட சுற்றுலா தலங்களுக்கு செல்லும் ரோடு உள்ளது. திருமூர்த்தி அணையில் இருந்து கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் தளி. ஜல்லிபட்டி குறிச்சிகோட்டை, குமரலிங்கம். கொழுமம், மடத்துக்குளம் உள்ளிட்ட கிராமங்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. குடிநீர் திட்ட குழாயில் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் விரையம் ஆகிறது. இதனால் தும்பலப்பட்டி மேட்டுப்பகுதியில் சாலையோரம் குடிநீர் விரயமாகி குளம் போல் தேங்கி நிற்கிறது. தினமும் ஆயிரக் கணக்கான லிட்டர் குடிநீர் வீணாக சாலையோரம் பெருகி நிற்கிறது. குழாயில் ஏற்பட்ட உடைப்பு மற்றும் கசிவு குறித்து குடிநீர் வாரிய அதிகாரிகளுக்கு பலமுறை ஊராட்சி நிர்வாகம் தகவல் சொல்லியும் கண்டு கொள்வதில்லை. தொடர்ந்து தினமும் பல்லாயிரக்கணக்கான லிட்டர் தண்ணீர் விரயம் ஆவது இல்லாமல் தண்ணீர் தேங்கி அதனால் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது.

பல்லடம் பகுதியில் இறைச்சி விற்பனை மந்தம்

பல்லடம், ஜூன் 10: பல்லடம் பகுதியில் இறைச்சி விற்பனை மந்தமாக இருந்தது. விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமை என்றாலே அன்று மட்டன், சிக்கன், மீன் சாப்பிடுவது அசைவ உணவு பிரியர்களின் வாடிக்கையாக உள்ளது.

வைகாசி கடைசி வளர்பிறை திருமண முகூர்த்தம், பிரதோஷம் மற்றும் சிறப்பு வாய்ந்த நன்நாள் என்பதால், பெரும்பாலான கோவில்களில் கும்பாபிஷேகம், சிறப்பு பூஜைகள் நடந்தது. இதில் பங்கேற்க பெரும்பாலான மக்கள் சென்றனர். திருமண மண்டபங்கள், கோவில்களில் கூட்டம் அதிகம் இருந்தது. அங்கு வழங்கப்பட்ட சைவ விருந்து உணவுகளை மக்கள் சாப்பிட்டனர். இதனால் இறைச்சி கடைகளில் விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமை இறைச்சி வாங்க கூட்டம் இன்றி, இறைச்சி விற்பனை மந்தமாக நடைபெற்றது. என்று இறைச்சி கடை வியாபாரிகள் தெரிவித்தனர்.

மாலையில் தமிழ் முரசு படியுங்கள்

அமராவதி அணை நீர்மட்டம் 83 அடியாக உயர்வு

உடுமலை, ஜூன் 10: உடுமலை அருகே உள்ள அமராவதி அணை 90 அடி உயரம் கொண்டது. இதன்மூலம் திருப்பூர், கரூர் மாவட்டங்களில் சுமார் 55 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

பழைய ஆயக்கட்டு பகுதிக்கு ஆற்று வழியாகவும், புதிய ஆயக்கட்டு பகுதிக்கு பிரதான கால்வாய் வழியாகவும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதுதவிர, நூற்றுக்கணக்கான கிராமங்கள் குடிநீர் வசதி பெறுகின்றன.தற்போது, பழைய 8 ராஜ வாய்க்கால் பகுதிக்கு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் பெய்த தென்மேற்கு பருவமழையால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து. தற்போது மழை ஓய்ந்துள்ளது. அணையில் நேற்று நீர்மட்டம் 83 அடியை தாடி இருந்தது. தென்மேற்கு பருவமழை அடுத்த சுற்று பெய்யும் போது, அணை நிரம்பி வழியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஓடும் பேருந்தில் பணம் திருடியவர் கைது

திருப்பூர், ஜூன் 10: ஈரோட்டை சேர்ந்தவர் சுந்தரராஜன் (60). இவர் நேற்று திருப்பூர் மத்திய பஸ் நிலையத்துக்கு சென்றார். அவர் தனது பையில் ரூ.24 ஆயிரத்து 500 வைத்திருந்தார்.பஸ்சில் இருந்து இறங்கிய போது அவருடைய பை கிழிக்கப்பட்டு பணம் திருடப்பட்டது தெரியவந்தது. இது குறித்து தெற்கு போலீசில் புகார் அளித்தார். போலீசார் பஸ் நிலைப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது அங்கு சந்தேகத்துக்கு இடமாக நின்றவரை பிடித்து விசாரித்தனர்.விசாரணையில் அவர் சாமுண்டிபுரத்தை சேர்ந்த தங்கவேல் (57) என்பதும், சுந்தரராஜனிடம் பணத்தை திருடியதும் தெரிய வந்தது. இதை தொடர்ந்து தங்கவேலை போலீசார் கைது செய்தனர்.

வேகத்தடைகளுக்கு வர்ணம் பூசும் பணி மும்முரம்

திருப்பூர், ஜூன் 10: திருப்பூர் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டத்தின் கீழ் உள்ள திருப்பூர் தெற்கு உட்கோட்டத்தின் பராமரிப்பில் உள்ள சாலைகளில் சாலை பாதுகாப்பிற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக இரவு நேரங்களில் வாகன ஓட்டிகளுக்கு எளிதாக தெரியும் வகையில் வேகத்தடைகளில் வர்ணம் பூசும் பணி நடைபெற்று வருகிறது. தற்போது மாவட்ட முக்கிய சாலையான பொங்கலூர் மேட்டுக்கடை சாலையில் வேகத்தடைகளுக்கு வர்ணம் பூசும் பணி நடந்து வருகிறது.

காங்கயம் நகராட்சி

திருப்பூர் மாவட்டம்

ந.க.எண்.1466/2022/அ2 — நாள் : 03.06.2025

Published under section 316 of the Tamil Nadu Urban Local bodies Rules 2023 framed by Government In G.0.45, Dated.12.04.2023 (MA&WS Department) L&A. Dated 04.06.1933 as ammended by the subsquent Government Order No.92, Dated.03.07.2007 (MA&WS Department), Government Order No.181, Dated.19.09.2008, Government Order No.66, Dated.06.08.2024 & Gazette No.35, Dated 28.08.2024.

நகர்மன்ற தீர்மான எண்.979, நாள்.31.12.2024, நகர்மன்ற தீர்மான எண்.981. நாள்.31.12.2024, நகர்மன்ற தீர்மான எண்:1107, நாள்.27.05.2025, நகர்மன்ற தீர்மான எண்.1108, நாள்.27.05.2025,

நகராட்சிக்கு சொந்தமான கடைகள் மற்றும் குத்தகை இனங்களுக்கான முன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

திருப்பூர் மாவட்டம் காங்கயம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வாரச்சந்தை பகுதியில் புதியதாக கட்டப்பட்டு வரும் புதிய தினசரி மார்க்கெட் 47 கடைகள், புதிய இறைச்சி 8 கடைகள், புதிய கட்டண கழிப்பிடம் மற்றும் பொது நிதி 2025–2026 ஆண்டின் கீழ் பழைய தினசரி மார்க்கெட் பகுதியில் புதியதாக கட்டப்பட்டு வரும் 6 கடைகள் ஆகிய பணிகள் முடிக்கப்படும் நிலையில் உள்ளது.

இதற்கான முன் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி, நகராட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள பொது மற்றும் சிறப்பு ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் அவரது அதிகாரம் பெற்றவரால் 25.06.2025 தேதி புதன் கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெறும். அன்றைய தினம் காலை 11.00 மணி வரையில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. மேற்படி ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் ஏலத்திற்கான பொறுப்புத் தொகையினை ஆணையர், காங்கயம் நகராட்சி (Commissioner, Kangeyam Municipality) என்ற பெயருக்கு காங்கயம் நகரில் செயல்படும் ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட கேட்பு வரைவோலை (DD)–யை 24.06.2025–ஆம் தேதி செவ்வாய் கிழமை மாலை 5.45 மணிக்குள் நகராட்சி அலுவலகத்தில் விண்ணப்பத்துடன் நேரில் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கு பின்னர் பெறப்படும் வரைவோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் ஒப்பந்தப்புள்ளிக்கான பொறுப்புத் தொகையினை 24.06.2025–ஆம் தேதி வரையில், தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட கேட்பு வரைவோலை (DD)–உடன். தாங்கள் கோர விரும்பும் தொகையை குறிப்பிட்டு ஆணையாளர், காங்கயம் நகராட்சி என்ற பெயருக்கு முகவரியிட்டு விண்ணப்பத்துடன் கேட்பு வரைவோலை (DD)–ஐ இணைத்து அதற்காக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டிக்குள் போடவேண்டும்.

ஏலம் முடிந்தவுடன் ஏலதாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியின் முடிவு மன்றத்தின் அதிகாரத்திற்குட்பட்டது.

ஏல அறிவிக்கையில் கண்டுள்ள பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகள் முழுமையாக பொருந்தும். அதனை அலுவலக விளம்பர பலகையில் ஒட்டப்பட்டள்ளது. இது குறித்த விவரங்கள் தேவைப்படின் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரத்தில் அலுவலகத்தல் நேரில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

வ. எண்.	கடை இனங்களின் விபரம்	கடை எண்கள்	கடைகளின் அளவு	கடைகளின் எண்ணிக்கை	செலுத்த வேண்டிய ஏல வைப்புத் தொகை (ரூ)	செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை (ரூ)	குத்தகை உரிம கால அளவு
1.	புதிய தினசரி மார்க்கெட் கடை	1	260 ச.அடி	1	50,000/–	50,000/–	ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகள்
2.	புதிய தினசரி மார்க்கெட் கடை	2 முதல் 47 வரை	130 ச.அடி	46	25,000/–	25,000/–	ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகள்
3.	வாரச்சந்தை புதிய இறைச்சி கடைகள்	1 முதல் 8 வரை	138 ச.அடி	8	25,000/–	25,000/–	ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகள்
4.	பழைய தினசரி மார்க்கெட் பகுதி புதிய கடைகள்	1 முதல் 6 வரை	135 ச.அடி	6	50,000/–	50,000/–	ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகள்

ஆண்டு குத்தகை இனம்

வ. எண்.	ஆண்டு குத்தகை இனங்களின் விபரம்	குத்தகை இனத்தின் அளவு	குத்தகை இனத்தின் எண்ணிக்கை	செலுத்த வேண்டிய ஏல வைப்புத் தொகை (ரூ)	செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை (ரூ)	குத்தகை உரிம கால அளவு
5.	வாரச்சந்தை புதிய கட்டண கழிப்பிடம்	527 ச.அடி	1	1,00,000/–	1,00,000/–	ஒப்படைக்கும் நாள் முதல் ஓராண்டு

(கி.பால்ராஜ் எம்.ஏ.,)
ஆணையாளர்
காங்கேயம் நகராட்சி

வெ.ஆ.எண்: 154/2025. செ.ம.தொ.2025/திருப்பூர் 09.06.2025

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம். சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

கஞ்சா விற்ற 2 வாலிபர் கைது

பல்லடம், ஜூன் 10: டிசா மாநிலத்தை சேர்ந்த சந்திரமணி பெகரா (39), இவர் பல்லடம் உடுமலை சாலையில் உள்ள சித்தம்பலம் சேரன் மாநகர் பகுதியில் உள்ள தனியார் பனியன் நிறுவனத்தில் தங்கி வேலை பார்க்கிறார். இவர் கஞ்சா விற்பனையில் ஈடுபடுவதாக போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்ட பல்லடம் போலீசார் அவரது அறையில் மறைத்து வைத்திருந்த 5 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்து அவரை கைது செய்தனர்.

அதேபோன்று, ஒடிசா மாநிலம் கலஹண்டி பகுதியை சேர்ந்த சஞ்சய்குமார் நியால் (28), என்பவர் திருப்பூரை அடுத்த, பெருமாநல்லூரில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் தங்கி வேலை பார்த்து வருகிறார். இவர் பல்லடம் அடுத்த ஆறுமுத்தாம்பாளையம் - கரைப்புதூர் இடையே செல்லும் சாலையில் உள்ள பண்ணைக்காடு என்ற இடத்தில் விளையாட்டு மைதானத்தில் வைத்து கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார். ரகசிய தகவல் அடிப்படையில், அவரை கைது செய்த பல்லடம் போலீசார், அவரிடம் இருந்து 2 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர். கைது செய்யப்பட்ட இருவரையும் போலீசார் பல்லடம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி திருப்பூர் மாவட்ட சிறையில் அடைத்தனர்.

பைக் திருடிய வாலிபர் கைது

திருப்பூர், ஜூன் 10: திருப்பூர், காலேஜ் ரோடு, துவாரகை நகர் பகுதியை சேர்ந்தவர் ஜெயக்குமார் (45). இவர் பனியன் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். இந்நிலையில், ஜெயக்குமார் கடந்த 4ம் தேதி தனது பைக்கை ரயில் நிலையத்தின் முன்பு நிறுத்திவிட்டு சென்றார். பின்னர் திரும்பி வந்து பார்த்த போது பைக்கை காணவில்லை. பல இடங்களில் தேடியும் பைக் கிடைக்காததால் ஜெயக்குமார் வடக்கு போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார் அதன்பேரில் போலீசார் வழக்கு பதிவு விசாரித்து வந்தனர். இந்த வழக்கு தொடர்பாக மங்கலம் ரோடு, பாரப்பாளையம் பகுதியை சேர்ந்த மாரிமுத்து (20) என்பவரை பிடித்து விசாரித்தனர். விசாரணையில் ஜெயக்குமாரின் பைக்கை திருடியதை ஒப்புக்கொண்டார். தொடர்ந்து மாரிமுத்தை போலீசார் கைது செய்து பைக்கை மீட்டனர்.

உயர்திரு 4வது கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

அசல் வழக்கு எண். 19 / 2025

புஷ்பா W/o.கதிரேசன், கதவு எண்.1/A/3, நேதாஜி நகர் மெயின் ரோடு, திருவான்மியூர், சென்னை. ...வாதி

–எதிர்–

1. அருள்கார்த்தி S/o.வேலுச்சாமிகவுண்டர், கதவு எண்.3/2A, சின்னபொம்மன்சாலை, புங்கமுத்தூர், உடுமலை தாலூக்கா.
2. ரேவதி D/o. மலையப்பகவுண்டர், க.தவு எண்.3/2A, சின்னபொம்மன் சாலை, புங்கமுத்தூர், உடுமலை தாலூக்கா.
3. தனபால் S/o.மலையப்பகவுண்டர், கதவு எண்.3/2A, சின்னபொம்மன் சாலை, புங்கமுத்தூர், உடுமலை தாலூக்கா.

...2, 4 மற்றும் 5 பிரதிவாதிகள்

2, 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு

தெரிவிக்கும் சம்மன்

இப்பவும் வாதி உங்கள் பேரிலும் மற்றும் மற்ற பிரதிவாதிகள் பேரிலும் பாகத்திற்கும் மற்ற பரிகாரங்களுக்கும் பிராது தாக்கல் செய்து அது 19.06.2025ம் தேதியன்று மேற்படி கோர்ட்டில் வாய்தா போடப்பட்டுள்ளது. அதில் உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனையிருந்தால் மேற்படி தேதியில் காலை 10.00 மணிக்கு மேற்படி கோர்ட்டில் ஆஜராகி தாங்கள் ஆட்சேபணையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறினால் உங்கள் பேரில் ஒரு கட்சியாக உத்தரவு செய்யப்படும் என்கிற விபரம் அறியவும்.

–கோர்ட்டார் உத்தரவுப்படி–

R.பாலகிருஷ்ணன், B.Sc., B.L.,
வழக்கறிஞர்,
உடுமலைப்பேட்டை.

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை

CMP. No. 278 of 2025 in FASR No. 273 of 2025

1. திரு. ஓம்சரவணன், எம்.டி.,
JKK நடராஜா பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை,
குமாரபாளையம்,நாமக்கல் மாவட்ட – 638 183
மற்றும் 3 பேர் ... மேல்முறையீடு செய்பவர்

Vs

திரு. ஏ. ராஜா
34, கண்மணி கார்டன், 15, வேலம்பாளையம்,
திருப்பூர் – 641 652. ... எதிர்மனுதாரர்கள்

பெறுநர்
திரு. ஏ. ராஜா, 34, கண்மணி கார்டன்,
15, வேலம்பாளையம், திருப்பூர் – 641 652.

வழக்கு எண். CC. No. 84/2024–இன் மீது மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் திருப்பூர், வழங்கப்பட்ட 29.11.2024 தேதியிட்ட ஆணையை ரத்து செய்யக்கோரி மேற்கூறப்பட்டுள்ள எனது கட்சிக்காரர், திரு. ஓம்சரவணன் எம்.டி. JKK நடராஜா பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, திரு. தினேஷ், PA JKK நடராஜா பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, திரு. சுரேஷ், மேலாளர், திரு. தினேஷ்குமார் HOD அவர்களால் CMP No. 278/2025 in FASR 27/2025 தங்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது அறிவிக்கப்படுகிறது. தங்களுக்கு செய்திதாளில் அச்சிட்டு 18.06.2025 அன்று திரும்பப்பெறும் அழைப்பாணை சார்பு செய்ய மாண்புமிகு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் சென்னை 05.06.2025 தேதியிட்ட CMP No. 278/2025 in FASR No. 273/2025 மூலமாக ஆணையிட்டுள்ளனர்.

தாங்கள் 18.06.2025 அன்று காலை 10.30 மணிக்கு மாண்புமிகு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் சென்னை, நேரடியாக அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி எந்த காரணத்தினால் மேற்படி மனு அனுமதிக்கக்கூடாது என்பதை தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள். தவறினால் மேற்படி வழக்கு மறுதரப்பில்லா நிலைமையை கடைபிடித்து முடிவெடுக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறீர்கள்.

மனுதாரரின் வழக்கறிஞர்
M/s. AGAM LEGAL
M.A. Chidambaram Building,
No.6, Esplanade, Chennai – 600 108

தேதி : 09.06.2025

IDFC FIRST Bank

CIN: L65110TN2014PLC097792
பதிவு அலுவலகம்: KRM டவர்ஸ், 8ஆவது தளம், ஹாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு, சென்னை – 600031.
தொ.பே.: +91 44 4564 4000 | தொலைநகல்: +91 44 4564 4022.

IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட்

(முன்பு கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெடாக இருந்து பின்னர் IDFC வங்கி லிமிடெடுடன் இணைக்கப்பட்டுத் தற்பொழுது IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுகிறது)

பிற்சேர்க்கை–IV-A [பார்க்க விதி 8(6) & 9(1)]

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ஒராக்கமாக்குதல் மற்றும் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) & 9(1) ஆகியவற்றின் கீழான அசையாச் சொத்துக்களின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கீழே பத்தி (ii)–இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்), உப கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், கடன்தாரர்(கள்) மற்றும் உப கடன்தாரர்(கள்) ஆகியோரிடமிருந்து வர வேண்டியுள்ளதும் பத்தி (i)–இல் குறிப்பிடப்பட்டுள்ளதுமான தொகையைத் திரும்பப் பெறும் பொருட்டு, ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட் (முன்பு IDFC வங்கி லிட். என்று அறியப்பட்டது) நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே பத்தி (iv)–இல் விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" எனும் முறையில் கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி விற்பனை செய்யப்பட உள்ளது.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய IDFC ஃபர்ஸ்ட் வங்கியின் www.idfcfirstbank.com இணையத்தளத்தில் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைப் பாருங்கள்.

இணையவழி சொத்து அளவீடு

வ.எண்	(i) கோரிக்கை அறிவிப்பு தொகை	(ii) ஒப்பந்த அடையாள எண்	(iii) கடன்தாரர்(கள்) மற்றும் உப கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) பெயர்	(iv) அடகு வைக்கப்பட்டுள்ள சொத்து முகவரி	(v) நிர்ணய விலை தொகை	(vi) முன் வைப்புத் தொகை (EMD)	(vii) ஏல தேதி மற்றும் நேரம்	(viii) ஏல முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி மற்றும் நேரம்	(ix) ஆய்வு தேதி மற்றும் நேரம்	(x) அதிகாரப்பூர்வ அலுவலர் பெயர் மற்றும் தொடர்பு எண்
1.	ரூ. 1501960.67/– கோரிக்கை அறிவிப்பு நாள்: 13.09.2023	11403859	அன்புச்செழியன் J, A மனோஜ், ஞானதீபம் அன்புச்செழியன் & அன்புச்செழியன் J தீபா C/o தீபா வுட் ஒர்க்ஸ்	அனைத்து துண்டு மற்றும் நிலத்தின் பகுதி நிலம் மற்றும் கட்டிடம் அமைந்துள்ள மனை எண் 48, கதவு எண் 9/154 – G, கே.எஸ்.பி. கார்டன், மருதூர் கிராமம், மேட்டுப்பாளையம், சர்வே எண்கள் 968/1, 968/2, 968/3, 968/4 மற்றும் 969/3 இல் அமைந்துள்ள 1750 சதுர அடி பரப்பளவைக் கொண்ட அல்லது அதன் அருகில், கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலுகா, மருதூர் கிராமத்தில் அமைந்துள்ளது, மேலும் எல்லையாக:– கிழக்கு: மனை எண்.47, மேற்கு: மனை எண்.49, வடக்கு: மனை எண்.39 & தெற்கு: 23 அடி சாலை & நேரியல் அளவீடு:– வடக்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 35 அடி, தெற்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 35 அடி, கிழக்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 50 அடி & வடக்கிலிருந்து தெற்காக: மேற்கு பக்கத்தில் 50 அடி & 1750 சதுர அடி பரப்பளவு அல்லது அதற்கு அருகில் அமைந்துள்ளது மற்றும் கோயம்புத்தூர் பதிவு மாவட்டம் மற்றும் மேட்டுப்பாளையம் துணைப் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.	INR 3492040.00/-	INR 349204.00/-	15.07.2025 அன்று முற்பகல் 11:00 மணி முதல் பிற்பகல் 01:00 மணி வரை	14.07.2025 அன்று காலை 10:00 மணி முதல் மாலை 05:00 மணி வரை	09.07.2025 அன்று காலை 10:00 மணி முதல் மாலை 04:00 மணி வரை	பெயர் தினேஷ்குமார் S – தொடர்பு எண் – 8610814856 பெயர் – மகேஷ் U – தொடர்பு எண் – 8122551254

சொத்தின் அமைவிடம் மற்றும் சொத்தின் படங்கள் ஆகியவற்றின் QR குறியீடு

பொறுப்புத்துறப்பு: இந்த அறிவிப்பு அசையாச் சொத்து விற்பனைக்காக மட்டுமே வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் அசையும் சொத்துக்கள் ஏதேனும் அசையாச் சொத்துடன் இருப்பின் அவற்றை விற்பனை செய்ய IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட் நிறுவனத்துக்கு உரிமை இல்லை என்பதையும் அறிக.

தேதி: 10.06.2025
இடம்: தமிழ்நாடு

அதிகாரப்பூர்வ அலுவலர்
IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட்
(முன்பு IDFC வங்கி லிட். என்று அறியப்பட்டது)

GRIHUM HOUSING FINANCE

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் பூனாவாலா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட். என அறியப்பட்டது)

பதிவு அலுவலகம்: 6-வது தளம், B கட்டடம், கங்கா டீரூனோ, லோஹிகான், புனே, மகாராஷ்டிரா 411014. கிளை அலுவலகம் அலகு: எண்.1510. 2வது தளம், ஸ்ரீ காம்ளெக்ஸ், திருச்சி ரோடு, கோயம்புத்தூர், தமிழ்நாடு - 641018

மின்–ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 & 9-ன் கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது முன்னர் GE மணி ஹவுசிங் பைனான்ஸ் பய்ளிக் அன்லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) (இதற்குப்பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13(12)–ன் படியும், கடனீட்டு சொத்துகளின் உரிமை (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 & 9–ன் கீழ் அள